நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No.89/2024**

அ.சா.1 (LW –2 ) சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | த/பெ. | : | ராமலிங்கம் |
| கிராமம் | : | சென்னிமலை | வட்டம் | : | பெருந்துறை, ஈரோடு |
| தொழில் | : | தலைமை காவலர் | வயது | : | 38 |

23-01-2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை ( சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டது)

நான் தற்சமயம் ஈரோடு இரயில்வே பாதுகாப்பு படையில் தலைமைக் காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2016ம் வருடம் நான் ஈரோடு ரயில்வே பாதுகாப்பு படையில், CPDS டீமில் காவலராக பணியாற்றி வந்தேன். 31-03-2019ம் தேதியில் நாகர்கோவிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் பேசன்சர் ரயில் வண்டி எண்.56319 வண்டியில் பார்வதி என்ற வயதான பெண்ணிக்கு டீயில் மயக்க மருந்து கொடுத்து அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் செல்போனை திருடிச்சென்றதாக 2019ம் வருடம் ஏப்ரல் மாதம் 13ம் தேதியில் குருசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை கைது செய்து தங்க நகை மற்றும் செல்போன் ஆகியவற்றை காவல் ஆய்வாளர் கைப்பற்றியிருந்தார். அதே வழக்கு சம்பந்தமாக 08-06-2019ம் தேதியில் பழனியம்மாள் என்ற எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்தார். 08-06-2019ம் தேதியில் எதிரி பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், காவலர் சுரேந்தர் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் பழனியம்மாளின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகும். பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் குருசாமியும் மாரியப்பனும் தான் நிலைய குற்ற எண்.91/2016 வழக்கில் குற்ற சம்பவத்தை செய்துள்ளார்கள் என்பது தெரியவந்தது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.01.23 19:28:10 +0530

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தேனியில் வைத்து பழனியம்மாளின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் குற்ற எண். 91/2016 ஆகும். நான் சொல்லியது போல் பழனியம்மாள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எங்கள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றால் தவறு. எனக்கு பழனியம்மாளை யார் என்றே தெரியாது என்றால் தவறு. நான் பழனியம்மாளை பார்த்ததில்லை என்றால் தவறு. என் முன்னிலையில் 2ம் எதிரி மாரியப்பன் எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் 2ம் எதிரி மாரியப்பனிடமிருந்து எந்த சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் பழனியம்மாளுக்கும் இந்த வழக்கின் 2ம் எதிரி மாரியப்பனுக்கும் எந்த சம்பந்தம் இல்லை எனறால் தவறு. எனது உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணத்தில் கையெழுத்து செய்துகொடுத்தேன் என்றால் தவறு. எனது உயர் அதிகாரியின் அறிவுறுத்தலின்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH

Digitally signed by V SURESH
Date: 2026.01.23 19:28:16 +0530

II Addl. Sessions Judge, Erode.

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஜ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No.89/2024**

<u>அ.சா.2 (LW –3 ) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேந்தர் | த/பெ. | : | மணி |
| கிராமம் | : | மதுரை | வட்டம் | : | மதுரை |
| தொழில் | : | தலைமை காவலர் | வயது | : | 40 |

<u>23–01–2026 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை ( சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டது)</u>

நான் தற்சமயம் மதுரை இரயில்வே பாதுகாப்பு படையில் தலைமைக் காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2019ம் வருடம் நான் மதுரை ரயில்வே பாதுகாப்பு படையில், CPDS டீமில் காவலராக பணியாற்றி வந்தேன். 31–03–2019ம் தேதியில் நாகர்கோவிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் பேச்ன்சர் ரயில் வண்டி எண்.56319 வண்டியில் பார்வதி என்ற வயதான பெண்ணிக்கு டீயில் மயக்க மருந்து கொடுத்து அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் செல்போனை திருடிச்சென்றதாக 2019ம் வருடம் ஏப்ரல் மாதம் 13ம் தேதியில் குருசாமி மற்றும் மாரியப்பன் ஆகியோர்களை கைது செய்து தங்க நகை மற்றும் செல்போன் ஆகியவற்றை ஈரோடு, ரயில்வே காவல் நிலைய காவல் ஆய்வாளர் கைப்பற்றியிருந்தார். அதே வழக்கு சம்பந்தமாக 08–06–2019ம் தேதியில் பழனியம்மாள் என்ற எதிரியை ஈரோடு, ரயில்வே காவல் நிலைய காவல் ஆய்வாளர் கைது செய்தார். 08–06–2019ம் தேதியில் எதிரி பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், காவலர் சரவணன் முன்னிலையிலும் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் பழனியம்மாளின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும். பழனியம்மாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் குருசாமியும் மாரியப்பனும் தான் இந்த வழக்கு குற்ற எண்.91/2016 குற்ற சம்பவத்தை செய்துள்ளார்கள் என்பது தெரியவந்தது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2026.01.23 19:28:24 +0530

<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தேனியில் வைத்து பழனியம்மாளின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் குற்ற எண். 91/2016 ஆகும். நான் சொல்லியது போல் பழனியம்மாள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் எங்கள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றால் தவறு. எனக்கு பழனியம்மாளை யார் என்றே தெரியாது என்றால் தவறு. நான் பழனியம்மாளை பார்த்ததில்லை என்றால் தவறு. என் முன்னிலையில் 2ம் எதிரி மாரியப்பன் எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் 2ம் எதிரி மாரியப்பனிடமிருந்து எந்த சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் பழனியம்மாளுக்கும் இந்த வழக்கின் 2ம் எதிரி மாரியப்பனுக்கும் எந்த சம்பந்தம் இல்லை எனறால் தவறு. எனது உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணத்தில் கையெழுத்து செய்துகொடுத்தேன் என்றால் தவறு. எனது உயர் அதிகாரியின் அறிவுறுத்தலின்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V SURESH — Digitally signed by V SURESH Date: 2026.01.23 19:28:33 +0530

II Addl. Sessions Judge, Erode.